தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்

ப.மு.எண்.44902 /அ4/இ3/2023, நாள். 22.12.2023.

===

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - உதவியாளர் நேரடி நியமனம் – (Group–II A Services) (Non - Interview posts) –2013–2014ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்களுக்குப் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை (4டி) எண்.18, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள்..28.10.2013.
2. அரசாணை (4டி) எண்.353, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை,நாள். 17.12.2013.
3. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை, நாள்.15.04.2015.
4. செயலாளர், தமிழ்நாடுஅரசுப்பணியாளர்தேர்வாணையம், சென்னை–3, கடிதம்ந.க.எண். 1789/PSD–G/2015, நாள்.27.02.2015
5. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.9825/அ4/இ3/2013__, நாள். 22.03.2015
6. திருவண்ணாமலை மாவட்ட, முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.3069/அ1/2023, நாள்.21.06.2023 மற்றும் 26.11.2023

===

2013 –2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் உதவியாளர்பதவிக்குநேரடி நியமனம் மூலம் (Group–II A Services) (Non -Interview posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (04)ல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக்கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (5)ன்அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12–ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டகீழ்க்கண்ட பணியாளருக்கு பணிவரன்முறை செய்யக்கோரி பார்வை (6)ன் வாயிலாக உரிய கருத்துருவினை திருவண்ணாமலை முதன்மைக்கல்வி அலுவலர்களின் பரிந்துரையுடன்பெறப்பட்டுள்ளது. மேலும், தனியர் திரு.பா.பாலமுருகன் என்பார் பட்டப் படிப்பு சான்றிதழின் உண்மைத் தன்மை

பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தினாலும், தனியரின் தாயாரின் மருத்துவக் காரணங்களாலும் உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வதில் கால தாமதம் ஏற்பட்டதாக திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட, முதன்மைக்கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்காணும் நேரடி நியமனம் உதவியாளருக்கு அவரது பெயருக்கெதிரில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள நாளில் உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள் ) சட்டம் 2016-ன் கீழ் உட்பிரிவு 28-ன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி திரு. / திருமதி. / செல்வி. | பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை படுத்தும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பா.பாலமுருகன், உதவியாளர். | கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, திருவண்ணாமலை மாவட்டம். | **24.03.2015** முற்பகல் |

மேற்காண் பணிவரன்முறை குறித்து எழும் ஐயப்பாடுகளை உடனடியாக நியமன அலுவலரின் கவனத்திற்கு சம்பந்தப்பட்ட அலுவலர் கொண்டு வர வேண்டும்.

இந்தப்பணிவரன்முறையானது, பார்வை (4)ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருப்பின் அவ்வலுவலகத்திற்கு இச்செயல்முறைகளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம் /- த.இராஜேந்திரன்
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

/உ.ந.உ.ப.அ/

இந்திராணி 26/12/2023
நேர்முக உதவியாளர்

பெறுநர் : சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வாயிலாக).
நகல் : சம்பந்தப்பட்டஅலுவலர் / தலைமையாசிரியர்.
நகல் : முதன்மைக்கல்விஅலுவலர், திருவண்ணாமலை

26/12/2023